பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை – 28

**எண். 40927/எஸ்1/2023 நாள். 19.07.2024**

பொருள்: ஆவண எழுத்தர் உரிம விதிகள் – ஆவண எழுத்தர்களின் விவரங்கள், புகைப்படத்துடன்– சார்பதிவாளர் அலுவலக அறிவிப்பு பலகையில் வெளியிடக் கோருதல் – தொடர்பாக

பார்வை: பதிவுத்துறை தலைவர் அலுவலக சுற்றறிக்கை எண். 24129/சி1/2021 நாள். 04.08.2021

-----

தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிம விதிகள் 1982ன் விதி 15ல் பதிவுக்கு வரும் பொதுமக்கள் அறிந்து கொள்ள ஏதுவாக ஒவ்வொரு பதிவு அலுவலகத்திலும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவண எழுத்தர்களின் பட்டியல் ஒன்று அறிவிப்புப் பலகையில் இடப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆவண எழுத்தர்களின் பட்டியல் பல பதிவு அலுவலகங்களில் முறையாக வைக்கப்படுவதில்லை எனவும், அவ்வாறு அறிவிப்பு பலகையில் உள்ள ஆவண எழுத்தர்களின் விவரங்கள் மேம்படுத்தப்படாமல்(update) உள்ள விவரமும் பதிவுத்துறைத்தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் பதிவுத்துறைத்தலைவர் அலுவலக சுற்றறிக்கையின்படி போலி ஆவணங்கள் பதிவு தொடர்பான விசாரணையின் இறுதியில் போலி ஆவணம் என முடிவு செய்யும் போது அதனை தயாரித்தவர் யார் என்ற விவரத்தை சரியாக அறியவும், மேலும் எழுதித்தந்தவருக்கும் இந்த போலி ஆவணம் தயாரிப்பில் ஏதாவது தொடர்பு இருப்பின் அவர்கள் மீது உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்பதால், ஆவணத்தின் இறுதிப் பக்கத்தில் ஆவணத்தை தயார் செய்த ஆவண எழுத்தர் அல்லது வழக்கறிஞரின் பெயர், உரிம எண் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனவும், அதனருகில் அவரின் பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிம்பம் அதிலேயே அச்சுப்பிரதியில் வரும்

Verified RealEstate™

வண்ணம் அச்சுப்பிரதி எடுத்து அதன் அருகில் கையொப்பம் இட வேண்டும் என்ற நடைமுறை கொண்டுவரப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக பொதுமக்களின் வசதிக்காகவும், உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களை அடையாளம் காண்பதில் உறுதுணையாகவும் இருக்கும் வண்ணம், அனைத்து பதிவு அலுவலகங்களிலும் அவ்வலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவண எழுத்தர்களின் விவரங்களை அதாவது ஆவண எழுத்தர் பெயர், உரிம எண், கைப்பேசி எண் அடங்கிய விவரங்களை ஆவண எழுத்தர்களின் புகைப்படத்துடன் இணைத்து பொது மக்கள் அறியும் வண்ணம் அறிவிப்பு பலகையில் தெரிவித்திட அனைத்து பதிவு அலுவலர்களும் அறிவிக்கப்படுகிறார்கள்.

பதிவு அலுவலர்களால் இச்சுற்றறிக்கை கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்துகொள்ள மாவட்டப்பதிவாளர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஒம்/–நாள்.19.07.2024
பதிவுத்துறைத்தலைவர்

–/ ஆணையின்படி /–

19/7/24
கூடுதல் சீட்டுப்பதிவாளர்
(கூடுதல் பொறுப்பு)

19/7/24

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள்
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்
அனைத்து சார்பதிவாளர்கள்

நகல்

1. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்
2. சிஎஸ் பிரிவு (இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட)
3. முக்கிய ஆணைக்கோப்பு
4. மாநிலத்தலைவர்
   தமிழ்நாடு பத்திரம்–நகல் எழுதுவோர் சங்கம்
   7 மாநகராட்சி சமூகக்கூட வளாகம்,
   கோபால்சாமி தெரு,

Verified RealEstate